بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

# பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் ஜெர்மனியில் 18 அக்டோபர் 2019 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் தொடரை எடுத்துக் கூறி வருகின்றேன். இன்றும் இதனை எடுத்துக் கூறுவேன். இதற்கு முன்பாக ஹஸ்ரத் குபைப் பின் அதீ அவர்களைப் பற்றி குறிப்பிட்டிருந்தேன். அவர்களைப் பற்றிய சில குறிப்புகள் எடுத்துக் கூறுவதிலிருந்து விடுபட்டு விட்டது. அவர்களது ஷஹாதத் சந்தர்ப்பத்தின்போது, பெருமானார் (ஸல்) அவர்களிடம், எனது சலாத்தை எட்ட வைப்பாயாக என்று அல்லாஹ்விடம் அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாத்தை எட்டவும் வைத்து விட்டான். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு சபையில் அமர்ந்திருந்தவாறு வ அலைக்கும் ஸலாம் என்றும் கூறினார்கள். மேலும் அன்னார் அந்த சஹாபாக்களிடம் இவர்களது ஷஹாதத் நிகழ்ந்து விட்டது என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் குபைப் பின் அதீ அவர்கள் கைதியாக ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஓர் அறிவிப்பு இவ்வாறும் வருகின்றது. அதாவது மாவிய்யா ஹுஜைர் பின் அபூ யேஹாப் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமைப் பெண் முஆவிய்யாஅவர்களின் வீட்டில்தான் ஹஸ்ரத் குபைப் அவர்கள் கைதியாக இருந்தார்கள். மாவிய்யா பிற்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

அவர்கள் கூறி வந்தார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் குபைப் அவர்களை விட சிறந்த வேறு எவரையும் கண்டதில்லை. நான் அந்த வீட்டின் கதவிலிருந்து பார்ப்பேன். அவர்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டிருப்பார்கள். எனது அறிவிற்கேற்ப, அன்றைய நாட்களில் பூமியின் மேற்பரப்பில் உண்பதற்காக ஒரு திராட்சைப் பழம் கூட இருக்கவில்லை. இந்த பகுதியிலேயே எந்த திராட்சைப் பழமும் இருக்கவில்லை. ஆனால் ஹஸ்ரத் குபைப் அவர்களின் கையில் ஒரு மனிதனின் தலைக்கு சமமாக திராட்சைப் பழத்தின் கொத்து இருந்தது. அதிலிருந்து அவர்கள் உண்டார்கள். அது அல்லாஹ்வின் ரிஸ்கே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஹஸ்ரத் குபைப் அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையில் திருக்குர்ஆன் ஓதுவார்கள். பெண்கள் அதை செவியுற்று அழுவார்கள். மேலும் அவர்களுக்கு ஹஸ்ரத் குபைப் அவர்களின் மீது கருணை ஏற்படும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் ஹஸ்ரத் குபைப் அவர்களிடம், குபைபே! உங்களுக்கு ஏதாவது தேவையுள்ளதா என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள், இல்லை என்று கூறினார்கள்.

ஒரு முறை குபைப் அவர்கள் என்னிடம், எனக்கு சவரக் கத்தியை கொடுத்தனுப்புங்கள். அதன் மூலம் நான் என்னை சரிபடுத்திக் கொள்ளட்டும் என்று கூறினார்கள். நான் எனது மகனான அபூ ஹுஸைனின் கையில் சவரக் கத்தியை கொடுத்து அனுப்பினேன். எனது மகன் சென்ற பிறகு எனது உள்ளத்தில் இந்த எண்ணம் வந்தது. அதாவது அவரது கையில் சவரக் கத்தி உள்ளது. எனவே அவர் இதற்காக பழிவாங்குவார். நான் என்ன செய்து விட்டேன்? குபைப் அவர்கள் சவரக் கத்தியை வாங்கியவாறு நகைச்சுவையாக அந்த குழந்தையிடம், நீ மிகப்பெரிய தைரியசாலியாக இருக்கின்றாயே? உனது தாய்க்கு எனது ஏமாற்றுதலைக் குறித்து அச்சம் இல்லையா? உனது கைகளில் சவரக் கத்தியை கொடுத்து அனுப்பியுள்ளார். ஆனால் நீங்களோ என்னைக் கொலை செய்ய நாடியுள்ளீர்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஆவிய்யா அவர்கள் கூறுகின்றார்கள்: குபைப் அவர்கள் கூறியவற்றை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் அவர்களிடம், குபைபே! அல்லாஹ்வின் அடைக்கலத்தின் காரணமாக நான் அச்சமின்றி இருக்கின்றேன். நான் நீங்கள் வணங்கக்கூடியவற்றின் மீது நம்பிக்கை கொண்டவாறு இந்த குழந்தையிடம் சவரக் கத்தியைக் கொடுத்து அனுப்பியுள்ளேன். இதனைக் கொண்டு எனது மகனைக் கொலை செய்வதற்காக நான் அவனை உங்களிடத்தில் அனுப்பவில்லை என்று கூறினேன். அதற்கு குபைப் அவர்கள், நான் இவனை ஒருபோதும் கொலை செய்ய மாட்டேன். நாங்கள் எங்களது மார்க்கத்தில் ஏமாற்றுதலை ஆகுமானதாக கருவதில்லை என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு நான் ஹஸ்ரத் குபைப் அவர்களிடம், மக்கள் உங்களை கொலை செய்வதற்காக காலையில் இங்கிருந்து அழைத்துக் கொண்டு செல்வார்கள் என்ற விஷயத்தை கூறினேன்.

சங்கிலியினால் கட்டப்பட்ட நிலையிலேயே அவர்களை அடுத்த நாள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு செல்லக்கூடிய வழியில் மூன்று மைல் தொலைவிலுள்ள தன்யீம் என்ற இடத்திற்கு மக்கள் அழைத்துச் சென்றார்கள். மேலும் குபைப் அவர்கள் கொலை செய்யப்படும் இந்த காட்சியை காண்பதற்காக குழந்தைகள், பெண்கள், அடிமைகள் மற்றும மக்காவிலிருந்து அதிகமானோர் அங்கு வந்தனர். மேலும் எவருமே மக்காவில் இருக்கவில்லை.

ஹஸ்ரத் குபைப் அவர்களுடன் ஹஸ்ரத் ஸைது பின் தஸ்னா அவர்களும் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட சம்பவம் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த காட்சியை காண்பதற்காக மக்கத்து தலைவரான அபூ சுஃப்யானும் வந்திருந்தார். அவர் ஸைது அவர்களைப் பார்த்து, முஹம்மது (ஸல்) உங்களிடத்திலும், நீங்கள் உங்களது வீட்டில் நிம்மதியாக இருப்பதையும் நீங்கள் விரும்பவில்லையா? என்று கேட்டார். அதற்கு ஸைது அவர்கள் கடுங்கோபத்துடன், அபூ சுஃப்யானே! நீர் என்ன கூறுகின்றீர். இறைவன் மீது ஆணையாக! மதீனாவின் தெருக்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில் ஒரு முள் குத்துவதைக் காட்டிலும் நான் மரணிப்பதே சிறந்ததாகும் என்று கூறினார்கள்.

இந்த பற்றுணர்வின் காரணமாக அபூ சுஃப்யான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகாமல் இருக்க முடியவில்லை. அவர் மிகவும் வியப்புடன் ஸைது அவர்களைப் பார்த்தார். மேலும் குரலை தாழ்த்தியவாறு ஸைது அவர்களிடம், எவ்வாறு முஹம்மதுடன், முஹம்மதின் தோழர்கள் அன்பு கொண்டுள்ளார்களோ, அதேபோன்ற அன்பை வேறு எவரும், எவர்மீதும் செய்ததாக நான் கண்டதில்லை என்பதற்கு இறைவனே சாட்சியாவான் என்று கூறினார்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் ஆவார்கள். அன்னார் நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் அவர்களின் மகனாவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிகவும் கலப்பற்ற சஹாபி ஆவார்கள். அறியாமைக் காலத்தின் அன்னாரது பெயர் குப்பாப் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரது பெயரை அப்துல்லாஹ் என்று மாற்றி வைத்தார்கள்.

மேலும் கூறினார்கள்: குப்பாப் ஷய்த்தானின் பெயராகும். அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அன்னார் கண்ணியமிக்க சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பத்ர், உஹது மற்றும் ஏனைய அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள். அன்னார் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ்விடமிருந்து ஹதீஸை அறிவித்துள்ளார்கள். அன்னாருக்கு வஹீயை எழுதும் நற்பாக்கியமும் கிடைத்துள்ளது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. உஹது போரின் சந்தர்ப்பத்தில் அன்னாரது இரண்டு பற்கள் உடைந்து விட்டன. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கத்தாலான பற்களை வைக்குமாறு அன்னாரிடம் கூறினார்கள்.

உஹது போரில் அபூ சுஃப்யான் முஸ்லிம்களிடம், அடுத்த வருடம் நாம் மீண்டும் பத்ர் மைதானத்தில் சந்திப்போம் என்று அறைகூவல் விடுத்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த அறைகூவலை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார்கள். எனவே அடுத்த வருடம் ஷவ்வால் மாதத்தின் இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்கள் 1500 சஹாபாக்களுடன் மதீனாவிலிருந்து வெளியேறினார்கள். மற்றொரு புறம் அபூ சுஃப்யான் பின் ஹரபும் குரைஷிகளைச் சார்ந்த 2000 போர் படையுடன் மக்காவிலிருந்து வெளியேறினார். ஆனால் இவ்வளவு பெரிய கூட்டத்தை கொண்டிருந்தபோதிலும் அவரது உள்ளம் அஞ்சியது. மேலும் முஸ்லிம்களுடன் போர் நடைபெறக்கூடாது என்று விரும்பினார். எனவே அவர், ஒருவனை மதீனாவை நோக்கி அனுப்பி வைத்தவாறு, எப்படியவாறு முஸ்லிம்களை அச்சுறுத்தி, உண்மை மற்றும் பொய்யான விஷயங்களை எடுத்துக் கூறி, நிம்மதியற்ற நிலையை உருவாக்கி, முஸ்லிம்களை போருக்காக வருவதிலிருந்து தடுத்து நிறுத்தி விடுவதற்கு முயற்சிகளை செய்தார். எதுவரை என்றால் சில பலவீனமான ஈமானைக் கொண்ட மக்கள் இந்த போரில் கலந்து கொள்ள அஞ்சினர். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள், முஸ்லிம்களுக்கு தைரியமூட்டினார்கள். மேலும் நான் தனியாக செல்ல நேரிட்டாலும் நான் செல்வேன் என்று கூறினார்கள். இந்த விஷயங்களைக் கேட்டு முஸ்லிம்களுக்கு தைரியம் ஏற்பட்டது. மேலும் அவர்கள் போருக்காக ஆயத்தமாகினர்.

எவ்வாறிருப்பினும் பெருமானார் (ஸல்) அவர்கள் 1500 சஹாபாக்களுடன் மதீனாவிலிருந்து வெளியேறினார்கள். மற்றொரு புறம், அபூ சுஃப்யான் தமது 2000 போர் வீரர்களுடன் மக்காவிலிருந்து வெளியேறினார். ஆனால் இறைவனது திட்டம் இவ்வாறு நடந்தது. அதாவது வாக்குறுதிக்கேற்ப முஸ்லிம்கள் பத்ர் மைதானத்தை வந்தடைந்தனர். ஆனால் குரைஷிகளின் படை சிறிது தூரம் வரை வந்த பிறகு மீண்டும் திரும்பி மக்கா சென்று விட்டது. இஸ்லாமிய படை எட்டு நாட்கள் வரை பத்ர் மைதானத்தில் தங்கியது. ஆனால் குரைஷிகளின் படை வராததினால் பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்திலிருந்து திரும்பிச் சென்றார்கள். இந்தப் போர் பத்ருல் மவ்இது என்று கூறப்படுகிறது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் யமாமா போரில் ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு கழுதையில் பயணம் செய்தபோது அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் அமர்ந்திருந்த ஒரு சபையை கடந்து சென்றார்கள். அப்போது அவன் முஸ்லிமாக இருக்கவில்லை. அந்த சபையில் சில இணை வைப்பவர்களும் இருந்தனர். சில யூதர்களும் இருந்தனர். சில முஸ்லிம்களும் அமர்ந்திருந்தனர். இந்த அனைவரும் ஒருவர் மற்றொருவருடன் இணைந்திருந்தனர். இந்த சபையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடந்து சென்ற போது தூசி கிளம்பியது. அந்த தூசி இந்த சபையின் மீது விழுந்தது. உடனே அப்துல்லாஹ் பின் உபை தனது போர்வையினால் தனது மூக்கை முடியவாறு, எங்கள் மீது தூசியை கிளப்ப வேண்டாம் என்று கூறினான்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் சலாம் கூறி அங்கு இறங்கினார்கள். அன்னார் அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்தார்கள். அவர்களுக்கு திருக்குர்ஆனை படித்துக் காட்டினார்கள்.

அப்துல்லாஹ் பின் உபை சலூல் கூறினான்: நீங்கள் கூறுவதை விட மிகச் சிறந்த நல்ல விஷயம் கிடையாது. சரிதான். மேலும் உங்களது பார்வையில் இதைவிட மிகச்சிறந்த கூற்று வேறு ஒன்றும் இல்லைதான். எங்களது சபைகளுக்கு வந்து துன்பத்தை தராதீர்கள். உங்களது இருப்பிடத்திற்கே திரும்பிச் சென்று விடுங்கள். மேலும் உங்களிடம் எவர் வருகின்றாரோ அவரிடம் நீங்கள் இதனை எடுத்துக் கூறுங்கள்.

அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்கள் இதனைக் கேட்டு விட்டு, இல்லை; யா ரஸூலல்லாஹ்! எங்களது இந்த சபைகளிலேயே தாங்கள் வந்து எங்களுக்கு படித்துக் காட்டுங்கள். எங்களுக்கு இந்த விஷயங்கள் மிகவும் பிடித்துள்ளது என்று கூறினார்கள். இதைக் கேட்டு முஸ்லிம் மற்றும் இணை வைப்பவர் மற்றும் யூதர் ஆகியோர் ஒருவர் மற்றொருவரை ஏசிப் பேசினர். எதுவரை என்றால் ஒருவர் மற்றொருவர் மீது தாக்குதல் தொடுத்திருக்கலாம். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களது உணர்வுகளை கட்டுப்படுத்துமாறு அவர்களுக்கு புரிய வைத்தார்கள். இறுதியில் அவர்கள் நிறுத்திக் கொண்டனர். பெருமானார் (ஸல்) அவர்களும், அன்னாரது சஹாபாக்களும் இணை வைப்பவர்கள் மற்றும் வேதத்தைச் சார்ந்தவர்கள் செய்பவற்றை மன்னித்து வந்தார்கள். மேலும் அவர்கள் இழைத்த துன்பங்களை பொறுத்துக் கொண்டார்கள்.

இறுதியில் அல்லாஹ் அன்னாருக்கு அனுமதி வழங்கினான். பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்தில் அவர்களை எதிர்த்து போரிட்டார்கள். அல்லாஹ் இந்தப் போரில் குரைஷிய நிராகரிப்பாளர்களில் பெரிய பெரிய தலைவர்களை கொன்றான். எனவே அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் மற்றும் அவனுடன் இருந்த இணை வைக்கக்கூடிய, சிலைகளை வணங்கக்கூடியவர்கள் அனைவரும், இப்போது இந்த அமைப்பு மகத்தானதாக ஆகிவிட்டது என்று கூறினர். எனவே அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் இஸ்லாத்தில் நிலைத்து நிற்பதாக பைஅத் செய்தனர். பத்ர் போரில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. எனவே அவர்கள் அஞ்சியவாறு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். உஹது போர் சந்தர்ப்பத்தின்போது பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை ஒன்றுகூட்டி அவர்களிடம் குரைஷிகளின் இந்த தாக்குதல் தொடர்பாக ஆலோசனை செய்தார்கள். அதாவது மதீனாவிலேயே தங்கி விடலாமா? அல்லது வெளியே சென்று போர் செய்யவா? என்று ஆலோசனை செய்தார்கள்.

ஆலோசனைக்கு முன்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இன்று இரவு கனவில் நான் ஒரு மாட்டைப் பார்த்தேன். மேலும் நான் பார்த்தேன். எனது வாளின் முனை உடைந்து விட்டது. பிறகு நான் பார்த்தேன். அந்த மாடு அறுக்கப்படுகிறது. பிறகு நான் பார்த்தேன். நான் எனது கையை ஒரு வலுவான மற்றும் பாதுகாப்பான கவசத்திற்குள் வைத்துள்ளேன். மேலும் நான் செம்மறி ஆட்டைப் பார்த்தேன். அதன் முதுகில் நான் பயணம் செய்கின்றேன்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த கனவிற்கு இவ்வாறு விளக்கம் கூறினார்கள்: மாடு அறுக்கப்படுவது என்பது, எனது சஹாபாக்களில் சிலர் ஷஹீதாவார்கள் என்று நான் கருதுகின்றேன். எனது வாளின் முனை உடைந்து விடுவது என்பது எனது அன்பிற்குரியவர்களில் எவருக்காவது ஷஹாதத் ஏற்படும் என்பதன் பக்கம் சுட்டிக் காட்டுகிறது. அல்லது எனக்கு ஏதாவது கஷ்டம் ஏற்படலாம். மேலும் எனது கையை கவசத்திற்குள் வைப்பது என்பது இந்த தாக்குதலை எதிர் கொள்வதற்கு நாம் மதீனாவில் இருப்பதே மிகச் சிறந்தது என்று நான் கருதுகின்றேன். மேலும் செம்பறி ஆட்டில் பயணம் செய்வது என்பது, இணை வைப்பவர்களின் தலைவர் இன்ஷா அல்லாஹ் முஸ்லிம்களின் கைகளால் கொல்லப்படுவார்.

இதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் தற்போதைய நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை கேட்டார்கள். சில பெரிய சஹாபாக்கள், மதீனாவில் இருந்தவாறே நாம் எதிர்கொள்வது சிறந்ததாகும் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும் இந்த கருத்தையே விரும்பினார்கள். மேலும் கூறினார்கள்: நாம் மதீனாவிலிருந்து போரை எதிர்கொள்வதே சிறந்ததாகும் என்று தோன்றுகிறது. ஆனால் பெரும்பான்மையான சஹாபாக்கள் குறிப்பாக பத்ர் போரில் கலந்து கொள்ளாத இளைஞர்கள் தாம் ஷஹீதாகி மார்க்கத்திற்கு தொண்டு செய்ய விரும்பினர். அவர்கள், நகரத்திலிருந்து வெளியேறி பரந்த மைதானத்தில் நாம் போர் செய்ய வேண்டும் என்று கூறினர். அவர்கள் எந்த அளவுக்கு அழுத்தமாக தமது கருத்தை தெரிவித்தனர் என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களது ஆர்வத்தைக் கண்டவாறு அவர்களது கூற்றை ஏற்றார்கள். மேலும் பரந்த மைதானத்தில் நிராகரிப்பவர்களை எதிர்கொள்வோம் என்று முடிவெடுத்தார்கள்.

பிறகு அன்னார் தமது வீட்டிற்கு சென்றார்கள். தலைப்பாகையைக் கட்டினார்கள். போர் கவசங்களை அணிந்தார்கள். அல்லாஹ்வின் பெயரைக் கூறியவாறு வெளியே வந்தார்கள். ஆனால் இந்த இடைப்பட்ட நேரத்திற்குள் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅது பின் மஆஸ் அவர்கள் மற்றும் மற்ற பெரிய சஹாபாக்கள் இளைஞர்களுக்கு புரிய வைத்ததன் காரணமாக அவர்களுக்கு தமது தவறுக்கான உணர்வு ஏற்பட்டது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்களது கருத்துக்கு எதிரில் தமது கருத்திற்கு அழுத்தம் கொடுக்கக்கூடாது.

அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து பெருமானார் (ஸல்) அவர்களிடம், யா ரஸூலல்லாஹ்! நாங்கள் தவறிழைத்து விட்டோம். நாங்கள் உங்களது கருத்திற்கு எதிராக எங்களது கருத்திற்கு அழுத்தம் கொடுத்து விட்டோம் என்று கூறினர். நீங்கள் எவ்வாறு எண்ணுகின்றீர்களோ அவ்வாறே செய்யுங்கள் என்று கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள்: ஆயுதங்களை அணிந்த பிறகு அல்லாஹ்வின் கட்டளையில்லாமல் அதை கழற்றுவது என்பது இறைவனது நபிமார்களின் கண்ணியத்திற்கு எதிரானதாகும். எனவே இப்போது அல்லாஹ்வின் பெயரால் செல்லுங்கள். நீங்கள் பொறுமையுடன் செயல்பட்டால் பிறகு நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் உதவி உங்களுடன் இருக்கும்.

அடுத்த நாள் அதாவது ஷவ்வால் 15 ஆம் தேதி ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டு சஹ்ரி நேரத்தில் இஸ்லாமிய படை முன்னேறிச் சென்றது. அதிகாலைப் பொழுதிலேயே அவர்கள் உஹது மைதானத்தை சென்றடைந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தின்போது நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபை பின் சலூல் ஏமாற்று வேலை செய்தான். மேலும் தமது 300 நபர்களுடன் முஸ்லிம் படையை விட்டு விலகியவாறு, முஹம்மது (ஸல்) அவர்கள் எனது பேச்சைக் கேட்கவில்லை. அனுபவமற்ற இளைஞர்களின் பேச்சைக் கேட்டு வெளியேறி வந்துள்ளார்கள். எனவே என்னால் இவர்களுடன் இணைந்து போர் செய்ய முடியாது என்று கூறியவாறு மதீனாவிற்கு திரும்பிச் சென்று விட்டான். இப்போது முஸ்லிம்களின் எண்ணிக்கை வெறும் 700 நபர்களைக் கொண்டதாகவே இருந்தது. ஆனால் நிராகரிப்பவர்களின் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது. முஸ்லிம்களின் எண்ணிக்கை 1/4 கால்வாசியை விட குறைவாகவே இருந்தது. எவ்வாறாயினும் போர் நடைபெற்றது. இதைப் பற்றி இன்ஷா அல்லாஹ் வரக்கூடிய குத்பாவில் எடுத்துக் கூறுவேன்.

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் மவ்லானாக மர்ஹூம் கமருத்தீன் சாஹிப் அவர்களின் மகனாகிய மதிப்பிற்குரிய காஜா ரஷீதுத்தீன் கமர் சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். அன்னார் அக்டோபர் 10 அன்று தமது 86 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். انالله وانا اليه راجعون

**மொழியாக்கம்: முஅல்லிம் A.கலீல் அஹ்மது**